இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 355 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 19 – ஞாயிற்றுக்கிழமை 04 ஆகஸ்டு 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 355 : Thiruvalluvar Year - 2055 - Aadi 19 - Sunday 04 August 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## 3% உள் ஒதுக்கீடு சட்டம் செல்லும்! உச்சநீதிமன்றத் தீர்ப்பையொட்டி

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - அருந்ததியினர் நன்றி!

## அமைப்புகள் – இயக்கங்கள் சார்பில் நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

சென்னை, ஆக. 4-

**அருந்ததியினருக்கு மூன்று சதவிகித உள் ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அருந்ததியின சமூகப் பிரதிநிதிகள் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.**

நாட்டில் தற்போது சமூக ரீதியாக இடஒதுக்கீடு முறை வருகிறது. பட்டியல் மற்றும் பழங்குடியினர் இட ஒதுக்கீட்டில் தமிழ்நாடு, பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்கள் ஏற்கெனவே உள் ஒதுக்கீடு வழங்கியுள்ளது. இதில் தமிழ்நாடு, பட்டியலின இட ஒதுக்கீட்டில் பழங்குடியினருக்கு என்று 3% உள் இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது.

கடந்த 2009-ம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின் அவர்கள், அருந்ததியினருக்கு 3% இட ஒதுக்கீடு சட்ட மசோதாவை தாக்கல் செய்தார். அப்போது கலைஞருக்கு உடல்நிலை பிரச்சினை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சூழலில், ஒரு கடிதம் மூலம் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அனுப்பி, சட்டப்பேரவையில் வாசித்தார்.

இதையடுத்து அருந்ததியினருக்கு 3% உள் ஒதுக்கீடு வழங்கி சட்டம் இயற்றப்பட்டது. எனினும் இந்த சட்டத்தை எதிர்த்து தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களுக்கு எதிராக



அருந்ததியினருக்கான 3 சதவிகித உள் இடஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று உச்சநீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பு அளித்திருப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அருந்ததியினர் சமூகத்தைச் சேர்ந்த அமைப்புகள், இயக்கங்கள் மற்றும் சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், கடந்த 2020- ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம் செல்லுபடி ஆகும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், ஏற்கனவே, உள்ஒதுக்கீட்டை அனுமதிக்கக்கூடாது என்று ஆந்திர மாநில வழக்கில் 2004ஆம் ஆண்டு உச்சநீதி மன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கியிருந்தது. இதன் காரணமாக இந்த வழக்கை 7 நீதிபதிகள் அமர்வுக்கு உச்சநீதி மன்றம் பரிந்துரை செய்திருந்தது.

இதேபோன்று பஞ்சாப், ஹரியானா மாநில வழக்குகளும் ஏழு நீதிபதிகள் அமர்வுக்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்குகள் ஒட்டுமொத்தமாக கடந்த பிப்ரவரி மாதம் 7 நீதிபதிகள் அமர்வில் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் தலைமை நீதிபதி சந்திர சூட் தலைமையிலான 7 நீதிபதிகள் அமர்வு தீர்ப்பு வழங்கியது. அதில், பட்டியலின, பழங்குடியினருக்கான உள்ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும் என்று அருந்ததியர் உள் இடஒதுக்கீடு தொடர்பான தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்று 6 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பு வழங்கினர்.

பட்டியலினத்தவரின் உட்பிரிவுகள் எதுவும் பட்டியல் வகுப்பினர் என்ற வரையறையில் இருந்து விலக்கப் படாத காரணத்தால் உள் ஒதுக்கீடு வழங்கலாம் என்றும், உள்ஒதுக்கீடு, அரசியல் சட்டத்தின் 14-வது பிரிவை மீறவில்லை என்றும் குறிப்பிட்ட நீதிபதிகள், பட்டியலின, பழங்குடி யினத்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க தடையில்லை என்றும் தெரிவித்தனர். பட்டியலினத்தவர்களும், பழங்குடியினரும் எதிர்கொள்ளும் பாகுபாடு காரணமாக அவர்களால் எளிதில் முன்னிலைக்கு வர முடியவில்லை என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. எனவே அரசியல் சாசன பிரிவு 14, துணை வகைப்பாட்டை அனுமதிக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

கடந்த 2009- ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் கொண்டு வரப்பட்ட அருந்ததியினருக்கு உள் இடஒதுக்கீடு செல்லும் என்று உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு தற்போது அனைவரும் வரவேற்பு அளித்து வருகின்றனர்.

**அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளதாவது : -**

**ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும்**

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ரூ.30 கோடியில் புனரமைக்கப்பட்டுள்ள

# கிண்டி ‘சிறுவர் இயற்கைப் பூங்கா!’

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக. 4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2024) சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னை, கிண்டி சிறுவர் பூங்கா 30 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு, பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள கிண்டி சிறுவர் இயற்கை பூங்காவை திறந்து வைத்தார். மேலும், ஒருங்கிணைந்த யானைகளின் கணக்கெடுப்பு 2024 அறிக்கையை வெளியிட்டார்.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழகத்தின் இயற்கை சூழலை பாதுகாத்திடவும், வனப்பரப்பை அதிகப்படுத்தும் நோக்கிலும், 2 கோடியே 80 லட்சம் மரக்கன்றுகளை நட்டு பசுமை தமிழ்நாடு இயக்கத்தை தொடங்கி வைத்தது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 5 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டமும் தொடங்கி வைக்கப்பட்டது. பள்ளிக்கரணையில் 2.5 ஹெக்டேர் நிலப்பரப்பில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட சதுப்புநில சூழலியல் பூங்கா, சென்னை செனாய் நகரில் மெட்ரோ இரயில் கட்டுமானத்திற்குப் பின்னர் 18 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட திரு.வி.க.பூங்கா திறந்து வைக்கப்பட்டது ஆகியவை குறிப்பிடத்தக்க பசுமை சார்ந்த பணிகளாகும்.

**பல்வேறு முனைப்பான நடவடிக்கைகள்!**

மேலும், சென்னையில் உள்ள செங்காந்தள் பூங்காவிற்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் “கலைஞர் நூற்றாண்டு பூங்கா” மற்றும் கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்கா ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டப்பட்டு, அங்கு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவைமட்டுமின்றி பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை வாயிலாகவும் புதிய பூங்காக்களை உருவாக்குதல், பழைய பூங்காக்களை புனரமைத்தல் போன்ற பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**கிண்டி சிறுவர் இயற்கை பூங்கா!**

கிண்டி சிறுவர் பூங்கா சென்னையிலுள்ள முக்கிய சுற்றுச் சூழல் சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும், ஆண்டுதோறும் 7 முதல் 8 லட்சம் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர். மேலும், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான பள்ளிகளைச் சேர்ந்த 60,000க்கும்

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## கேரளா - வயநாடு நிலச்சரிவை

# தேசியப் பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு மறுப்பு!

## கேரள அமைச்சர் குற்றச்சாட்டு!

திருவனந்தபுரம், ஆக. 4 –

கேரளா வயநாடு நிலச்சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு மறுத்துள்ளதாக கேரள அமைச்சர் கே.ராஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஒன்றிய அரசுக்கு கேரள அமைச்சரவை கடிதம் எழுதியும் தேசிய பேரிடராக அறிவிக்க அவர்கள் தயாராக இல்லை. இதனிடையே, வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு மறுப்பதாக, கேரள அமைச்சர் கே.ராஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வயநாடு நிலச்சரிவை ஏற்கனவே மாநில பேரிடராக கேரள அரசு அறிவித்துள்ளதாகவும், ஆனால் வயநாடு நிலச்சரிவை தேசிய பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு தயாராக இல்லை என்றும் குறிப்பிட்டார். ஒன்றிய அரசுக்கு கேரள அமைச்சரவை கடிதம் எழுதியபோதும், தேசிய பேரிடராக அறிவிக்க அவர்கள் தயாராக இல்லை என்றும் கே.ராஜன் புகார் தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.8.2024) சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் நினைவு நாளையொட்டி, சென்னை, கிண்டி, திரு.வி.க. தொழிற்பேட்டை வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மருத்துவர் இரா.வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

